**தலாவ பிரதேச சபை - 2023**
**-------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலாவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தலாவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது,

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல,

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்,

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப் பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா. 13,380,968 பெறுமதியான 10 வீதி நடவடிக்கைகளுக்கு உரியதான 2022 ஆம் ஆண்டின் தேய்மானம் ரூபா. 1,338,097 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சரியான தேய்மான பெறுமதி இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தலாவ Green City செயற்திட்டத்தின் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ரூபா. 5,981,077 தொகை மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் மூலதன மானியங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மூலதன நடவடிக்கைகள் சொத்துக்கள் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் குழாய் கிணறு மற்றும் தண்ணீர் தாங்கி என்பவற்றை நிர்மாணிப்பதற்கான செலவு ரூபா. 1,210,425 மீளாய்வாண்டில் மூலதன மானியமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | மூலதன மானிய பெறுமதி சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட 04 செயற் திட்டங்களுக்கு உரிய ரூபா .7,291,898 ஆன சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் ஆகவும் மற்றும் மூலதன மானியங்கள் ஆகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் மூலதன மானியங்கள் இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்கு அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 22,477,373 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டில் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா. 11,591,444 ஆக இருந்தது.

### 2.2 நிதி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குக் கிடைத்திருந்த நீதிமன்ற தண்டம், முத்திரைக் கட்டண வருமானம் ரூபா. 37,250,000 மக்களின் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அந்தத் தொகையினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | அதிகார பிரதேசத்தில் அத்தியாவசியமான செயற்பாடுகளுக்காக நிதியினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| (i) | வீத வரி மற்றும் வரி | 13,438,659 | 15,391,286 | 15,151,557 | 22,571,661 | 13,100,493 | 14,183,776 | 14,662,751 | 22,331,932 |
| (ii) | வாடகை | 16,571,200 | 14,251,837 | 15,564,280 | 4,138,014 | 21,132,744 | 13,622,075 | 14,677,552 | 5,450,457 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 4,618,650 | 4,352,086 | 4,863,083 | 138,150 | 4,221,400 | 4,230,756 | 4,657,114 | 649,150 |
| (iv) | ஏனைய வருமான ங்கள் | 31,854,111 | 34,772,413 | 19,168,431 | 33,498,332 | 25,743,850 | 28,774,180 | 19,138,164 | 17,894,350 |
| | | 66,482,620 | 68,767,622 | 54,747,354 | 60,346,157 | 64,198,487 | 60,810,787 | 53,135,581 | 46,325,889 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டில் வீத வரி பட்டியலிடல் ரூபா.6,240,417 ஆன போதிலும் அதில் 52 சதவீதமான ரூபா. 3,082,766 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 2023 ஜனவரி 01 ஆம் திகதியில் முன்னைய ஆண்டுகளுக்கு உரியதான நிலுவை வீத வரி ரூபா. 19,918,933 காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் அதில் 87 சதவீதமான ரூபா. 17,242,538 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரியினை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 32 நிறுவனங்களுக்கு உரிய நிலுவை கைத்தொழில் வரி ரூபா. 20,750 உம், 184 நிறுவனங்களுக்கு உரிய நிலுவை வியாபார வரி ரூபா. 178,800 உம், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | சபைக்குச் சொந்தமான கடைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வாடகை ரூபா. 2,431,639 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது என்பது மற்றும் ஒப்பந்தம் காணாமல் போயுள்ளது என்பதால் மீதி நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது. | - மேற்படி - |
| (ii) | வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்கியமைக்காக 01 வருடத்திற்கும் 08 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தொடக்கம் அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா. 1,265,976 ஐ அறவிடுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (iii) | சபைக்கு சொந்தமாக இடம் இல்லாமல் வியாபார உரிமைக்காக 33 இடங்களை பெயரளவில் மட்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் ரூபா. 5,778,686 நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு சபைக்கு முடியாது இருந்தது. | எதிர்காலத்தில் அந்த இடங்களில் விற்பனைக் குடில்களைத் தாபித்து வருமானத்தினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர் குறித்த இடத்தினை சபைக்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள 04 நீர் செயற்திட்டங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா. 1,738,808 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவைத் தொகை தவணை ரீதியில் அறவிடப்பட்டு வருகின்றது என்பது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் | இந்தத் தொகையினைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை | - மேற்படி - |

| | |
|---|---|
| 31ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த நீதிமன்ற தண்டம் ரூபா. 25,428,442 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 4,718,481 உம் ஆகும். | மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணைச் சட்டங்களை இயற்றக்கூடியதாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த விடயங்களுக்காக துணைச் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | துணைச் சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எப்பாவல வாரச் சந்தையின் முன்னால் மற்றும் நகரின் ஹோட்டல் என்பவை மிகவும் அசுத்தமாக மற்றும் மக்களின் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையில் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்ட போதிலும் பொது சுகாதார பரிசோதகர் மூலம் அந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | பொதுச் சுகாதார பரிசோதகர்களை ஈடுபடுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தம்புத்தேகம வாரச் சந்தைக்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா. 9,500,000 செலவில் நிமார்ணிக்கப்பட்ட இடத்திற்கு வாரச் சந்தையினைக் கொண்டு செல்வதற்கு 2023 ஆம் ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு பலனற்ற செலவாகக் காணப்படுகின்றது. | ஆளுநரின் அனுமதி கிடைத்த பின்னர் திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பது. | திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஏப்ரல் 15 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்த சபைக்குச் சொந்தமான வண்டியின் நட்டத்தில் ரூபா. 4,458,993 ஐப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் இனம் காணப்பட்டிருந்த ரூபா. 4,018,681 ஆன நட்டம் தொடர்பில் முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டு அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இனங் காணப்பட்டு அந்த நட்டத்தினை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கோவைகள் பரீட்சிப்பு செய்யப்பட்டு உண்மையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பது. | முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான தலாவ மற்றும் எப்பாகல வாரச் சந்தைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து வியாபாரிகளுக்குத் தேவையான சுகாதார வசதிகளை வழங்குதல், வேலி மற்றும் படலை அமைக்கப்பட்டு சந்தை காணியில் காணப்படும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தலாவ வாரச் சந்தை காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 100 விற்பனைக் குடில்களை வியாபாரம் செய்வதற்கு ஈடுபடுத்தாததால் பலனற்று காணப்படுகிறது. | எதிர்காலத்தில் இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வாரச்சந்தையில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் நடைபாதை வியாபாரம் மற்றும் வாகன தரிப்படத்திற்கான கட்டணத்தினை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்படாததால் அதன் மூலம் ஈட்டப்படக் கூடியதாக இருந்த வருமானத்தினை சபை இழந்துள்ளது. | ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு 04 வருடங்கள் தொடக்கம் 17 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த 03 வாகனங்களை அகற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்கள், 03 மாதங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தொட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி இருந்த 02 வாகனங்களுக்கான காப்புறுதிப் பலனைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் வாகனங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | காப்புறுதி பலனைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வாகனங்களைத் திருத்துதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | எப்பாவல நூலகத்தில் இருந்து காணாமல் போயுள்ளதாக இனம் காணப்பட்டுள்ள 124 புத்தகங்களுக்கு உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இனம் காணப்பட்டு அந்த நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் முன்மொழிக்கப்பட்ட ரூபா. 1,302,654 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட 07 செயற்திட்டங்களில் எதுவிதமான வேலைத் திட்டங்களும் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் குறித்த செயல் திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பது. | முன்மொழியப்பட்ட செயல்திட்டம் குறித்த வருடத்தினுள் செயல்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய | புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதன் | செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | மயானத்துக்கான துணை சட்டத்தினை தயாரிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் அந்த செயல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பின்னர் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது. | பணிகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான வீதிகள் இனம் காணப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டில் ஒருகலயாயவில் அமைந்துள்ள கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இந்த மத்திய நிலையத்திற்குக் காட்டு யானைகள் வருகின்ற போதிலும் அதற்காக யானைக்கான வேலி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் அங்கு காணப்படும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. அதே போன்று அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் ரூபா. 1.2 மில்லியன் நிதி இதற்காகக் கிடைக்க உள்ளது என்பதுடன் அந்த நிதி கிடைத்ததன் பின்னர் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது. | - மேற்படி - |

**4.2. சுற்றாடல் பிரச்சினைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஒருகலயாயவில் அமைந்துள்ள கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் இருந்து சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் கழிவுப் பகுதியின் கூரை முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை என்பதனால் சுற்றாடல் அனுமதி பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாது இருந்தது என்பது. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |